Mobile Booking Service in Madras City

* 333 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the scheme of the Southern Railway to run a mobile goods booking scheme ;

(*b*) whether permission of the Commissioner of Police, Madras City, has been obtained; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தென் பிராந்திய இரயில்வே, பொதுநிர்வாகி அவர்கள், சிறுசாமான்கள் அனுப்புவதற்கு பண்டங்கள் பதிவு செய்து அனுப்பும் நடமாடும் திட்டம் என்ற புதுபணியை சென்னை நகரில் 26—2—1970 அன்று துவக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

(இ) இல்லை. காவல் அதிகாரிகளின் அனுமதி தேவையில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

சாத்தனூர் அணையில் திரைப்படம் பிடிக்கக் கட்டணம்

* 334 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டில் திரைப்படம் எடுக்க கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஆம்.

(இ) நாள் ஒன்றுக்கு 100 வீதம் கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா : சாத்தனூர் அணைக்கட்டில் படப் பிடிப்புக்குத் தற்போது வசூலிக்கும் தொகையை அதிகப்படுத்தி, மேற்கொண்டு அந்த இடத்தை இன்னும் வனப்புள்ளதாக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபோன்ற எண்ணம் இப்போது இல்லை.

Paddy fields in Lalgudi Taluk

* 335 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a number of paddy fields in Lalgudi Taluk, Tiruchirappalli district have been converted into sugarcane growing fields this year.

(*b*) if so, the extent that has been so converted; and

(*c*) whether prior permission of the Government was obtained to effect these conversions?